# தடம்

செய்தி மடல்

# THADAM

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி * NEWS LETTER

J/CHAVAKACHCHERI HINDU COLLEGE CHAVAKACHCHERI January - March VOLUME 1 ISSUE 1


## கல்லூரி நிறுவுநர் நாள் - 2008





எமது கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் வருடத்தின் முதல் நிகழ்வாக நிறுவுநர் நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்தவகையில் இவ்வருடமும் 05.02.2008 அன்று வெகு சிறப்பாக நிறுவுநர் தினமும், கல்லூரிச் சஞ்சிகையான தாமோதரன் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெற்றன. கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பேராசிரியர் க.கந்தசாமி (பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) அவர்கள் முதன்மை அதிதியாகவும், வைத்திய கலாநிதி C.S.யமுனாநந்தா (பொறுப்பதிகாரி, மார்பு நோய் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அவர்கள் நிறுவுநர் நினைவுப் பேருரை ஆற்றியும் சிறப்பித்தனர். கல்லூரிச் சஞ்சிகையான தாமோதரன் வெளியீட்டுரையை கவிஞர் சோ.பத்மநாதன் (முன்னாள் அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) அவர்கள் நிகழ்த்தினார். மலர்க்குழு சார்பாக எமது கல்லூரி ஆசிரியை திருமதி க.ஸ்ரீதரன் அவர்கள் பதிலுரை நிகழ்த்தினார்.

முதன்மை அதிதி அவர்கள் உரையிலே ...

இப்பிரதேச மாணவர்களுக்கு சைவ அறிவு புகட்டுவதும், அவர்களின் நல்வாழ்வுக்கு உகந்த தொழில்சார் அறிவைப் பெறக்கூடிய அடிப்படை அறிவை வழங்குவதும் ஸ்தாபகரின் நோக்கமாகும். இந்நோக்கத்தை இன்று இக்கல்லூரி முழுமையாக நிறைவேற்றி நிற்கின்றது. இந்நிலைக்கு முன்னையஅதிபர்களினதும், தற்போதைய அதிபரினதும், ஆசிரியர் குழாத்தினதும் பிரதிபலன் கருதாத சேவையே காரணமாகும். இக் கல்லூரியின் கல்விப் பெறுபேறுகள் பாராட்டப்படவேண்டியவை. பொருளாதாரத்தில் கீழ் நிலையில் உள்ள சமூகத்தின் கல்வித் தேவையை நிறைவேற்றி மிளிரும் இக்கல்லூரியின் கல்விச் சேவை தொடருவதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி ஆர்வலர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

மூன்றாம் நிலைக்கல்வியைப் பெறவேண்டிய மாணவர்களில் 90% ஆனவர்கள் எந்தவித வாய்ப்புகளும் இன்றி தமது குடும்பத்திற்கும், தாம் வாழும் சமூகத்திற்கும் பாரமாக நாட்டிற்கு பயனற்றவர்களாக ஆக்கப்படுகின்றனர். பாடசாலைகள் இந்நிலையை மாற்றுவதற்கு பங்குதாரராக செயற்பட வேண்டும். இத்தகைய மாணவர் குழுமத்தின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கென வார இறுதி நாட்களிலும், விடுதலை நாட்களிலும் தொழில் சார் பயிற்சி வகுப்புக்கள் நடத்த முயற்சி செய்ய வேண்டும்.

உலகத்தில் சிறப்பாக வாழ்வதற்கு மனிதனொருவன் அறிவுடன் இன்னும் பல திறன்களையும் உடையவனாக இருக்க வேண்டும். தொடர்பாடற்திறன், குழுவாகத் தொழிற்படும் திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், முடிவுகள் எடுக்கும் திறன், பொறுப்பேற்கும்திறன் போன்றவை பாடசாலைகளால் வளர்த்தெடுக்கப்படவேண்டியவை. இத்தகைய திறன்களை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு ஆசிரியர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.இது காலத்தின் தேவையாகும். ஆசிரியர்கள் தம்மைத்தாமே சுயமதிப்பீடு செய்வதன் மூலம்கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறனும், விளைதிறனும் உடையதாக ஆக்க முடியும். முழுமைத்தர மதிப்பீடு, மாணவர்களின் வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகளின் மதிப்பீடு என்பனவற்றை ஆசிரியர் குழுவொன்று மதிப்பீடு செய்வதே சிறந்த முறையில் அமையும். அத்துடன் ஆசிரியர் ஒருவரின் கற்பித்தல் செயற்பாடு சக ஆசிரியரால் மதிப்பீடு செய்யப்பட்டு அறிவுறுத்தப்படுவது மேலும் கல்வி முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

சமூகத்திற்கு பாடசாலையொன்றால் மிகச் சிறப்பாகச் செய்து கொடுக்கப்படவேண்டியது விடுதி வசதிகளை

பாடசாலையில் அமைப்பதாகும். விடுதியில் தங்கிக் கற்கின்ற மாணவர்களின் கற்றல் விருத்தி பெறுவதுடன், சமூக விழுமியங்களையும் பெறக்கூடிய சந்தர்ப்பத்தை இது உருவாக்கும். சிரமத்தை நோக்காது இக்கல்லூரியில் விடுதி வசதியை ஏற்படுத்த முன்வர வேண்டும்.

நல்லதோர் சமுதாயம் உருவாக்கப்பட வேண்டுமாயின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் மதித்துப் பேணிப் பாதுகாக்கின்ற இளம் சமுதாயம் உருவாக்கப்படல் வேண்டும். இளம் சமுதாயத்தினரை நெறிப்படுத்தி வழிநடத்துவது இன்றைய தேவையாகும்.

கல்வி கற்கும் ஆற்றலை உயர்த்த வேண்டுமானால் சுயகற்றலை ஊக்குவிக்க வேண்டும். பாலர்கல்வி முதல் உயர்தரக் கல்வி வரை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு பிள்ளைகளை அனுப்புகின்ற மனநிலை மாற்றம் பெறவேண்டும். கல்வியின் அடிப்படை நோக்கமாகிய ஒழுக்கம் பேணி வளர்க்கப்பட வேண்டும். ஆசிரியமாணவ உறவு பேணப்பட வேண்டும். பெற்றோரை, ஆசிரியரை மதிக்கின்ற மாணவ சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும்



நிறுவுநர் நினைவுப் பேருரையானது "ஆரோக்கியத்திற்கான கல்வியும், கல்விக்கான ஆரோக்கியமும், ஆரோக்கியமான கற்றலும்" என்ற விடயப்பரப்பில் நிகழ்த்தப்பட்டது.

ஆரோக்கியமாக ஒருவன் வாழ்வதற்கு கல்வி மிகவும் அவசியமாகின்றது. நோய்த்தடுப்பு, சுகாதாரப்பழக்கங்கள், உடற்பயிற்சி, சமூக உளத்தாக்கங்கள் பற்றிய கல்வி, முரண்பாடுகளில் இருந்து விலகல் போன்ற அம்சங்கள் கல்வி மூலம் வழங்கப்படுகின்ற போது ஆரோக்கியத்திற்கான கல்வியாக அது அமைகின்றது.

ஒவ்வொரு வயதுப் பருவத்திலும் ஒவ்வொரு வகையான கற்றல் திறன்கள் விருத்தியடைகின்றன. இவ்வாறான திறன்களைச் சரியான முறையில் வளர்த்தல் வேண்டும். இத்திறன்கள் விருத்தி பெறுவதற்கு உடல் ஆரோக்கியம் பேணப்பட வேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்து போஷாக்குள்ள உணவுகள் உட்கொள்ள வேண்டும்.

கல்வி கற்றலில் குறிப்பெடுத்தல், மாதிரி வினா விடைகள், ஆராய்ந்து கற்றல், இடைவிட்ட கற்றல், குழுவாகக்கற்றல், சுயகற்றல், நேரசூசிகை ஒன்றினடிப்படையில் கற்றல், தினமும் கற்றல் என்பவற்றுள் தினமும் ஆறு மணித்தியாலங்கள் சுயமாகக் கற்றல் உயர்தர மாணவர்க்கு அதிக பயனுள்ளதாகும். கற்றவற்றை மீட்டலும், வகுப்பறையில் நன்கு கிரகித்தலும், இலக்குவைத்துக் கற்றலும் மிகவும் அவசியமாகும். தற்காலச் சூழ்நிலையில் பாடசாலைக்கு அருகில் மாணவர் வசிப்பது போக்குவரத்துத் தொடர்பான நேரஇழப்பு ஏற்பட்டு, கல்வி இழப்பு ஏற்படுவதைத் தடுப்பதாக அமையும். இத்தகைய அம்சங்கள் ஆரோக்கியமான கற்றலுக்கு அடிப்படையாகும்.

இத்தகைய கற்றல் தொடர்பான அம்சங்கள் நிறுவுநர் நினைவுப் பேருரையில் இடம்பெற்றிருந்தன.

## போட்டிகள் மாணவர் சாதனைகள்

### தமிழ்மொழித்தினம் – 2007

2007 ஆம் ஆண்டிற்கான வலய மட்டத்திலான தமிழ்மொழித்தினப் போட்டிகளில் எமது கல்லூரி மாணவர்கள் பெற்ற இடங்களும் நிழக்வுகளும்.

ஒன்பது நிகழ்ச்சிகளில் முதலாமிடத்தையும், ஆறு நிகழ்வுகளில் இரண்டாமிடங்களையும், நான்கு மூன்றாமிடங்களையும் பெற்றுக் கொண்டனர்.


முதலாம் இடம் பெற்று மாவட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர் விபரம்

நடனம் (தனி) பிரிவு - 2 ஜெ.சரண்யா
நடனம் (தனி) பிரிவு - 3 லோ.மயூரதி
நடனம் (தனி) பிரிவு - 4 க.இந்திகா
கவிதை ஆக்கம் பிரிவு - 4 ச.யஸ்வினி
பாவோதல் பிரிவு - 5 மு.சௌமியா
பேச்சுப் போட்டி பிரிவு - 5 சி.சோபிதன்
தமிழறிவு வினாவிடைப் போட்டி
இசை - குழு I
இசை - குழு II

மாவட்ட மட்டப் போட்டிகளில் இரண்டு முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டது எமது கல்லூரி
இசை - குழு II - முதலாமிடம்
நடனம்-தனி பிரிவு-3 லோ.மயூரதி 1ம்இடம்
நடனம்-தனி பிரிவு-2 ஜெ.சரண்யா 2ம்இடம்

ஏனைய போட்டிகளில் மூன்றாமிடங்களையும் பெற்றுக் கொண்டனர்.

### விளையாட்டு



2007 ஆம் ஆண்டிற்கான வலயமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் சாதனைகள்

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வலயமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் எமது கல்லூரியின் 16, 18 வயதுப் பிரிவு அணிகள் முதலாமிடத்தையும், 14 வயதுப் பிரிவு அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளன.

மென்பந்து கிரிக்கெற் போட்டி

2008 ஆம் ஆண்டிற்கான மென்பந்து கிரிக்கெற் போட்டியில் எமது கல்லூரியின் 19 வயதுப் பிரிவு அணி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

**மாகாண மட்டக் கணித விஞ்ஞானப் போட்டி 2007**

மாகாண நிலையில் நடைபெற்ற போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கணிதம்

தரம் - 6 சு.சிருஷ்டிகா 3ம் இடம்
தரம் - 7 T.செந்தாளன் 1ம் இடம்
தரம் - 8 R.நிதீஸ்ராம் 1ம் இடம்

விஞ்ஞானம்

தரம் - 10 S.நிஷாந்தி 1ம் இடம்

தரம் - 11 S.விசாகன் 2ம் இடம்

**ஆறுமுக நாவலர் குருபூசைத்தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட வலய மட்ட கட்டுரை பேச்சுப்போட்டிகள்**

தரம் 6-9 - சி.சோபிதா கட்டுரை 1ஆம் இடம்
தரம் 6-9 - வே.லதுஜா பேச்சு 1ஆம் இடம்
தரம் 10-12 சி.சோபிதன் பேச்சு 1ஆம் இடம்

**ஆறுமுகநாவலர் குருபூசைத்தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் சைவபரிபாலன சபை நடத்திய பேச்சுப் போட்டி**

மேற்பிரிவு - சி.சோபிதன் 2ஆம் இடம்
கீழ்ப்பிரிவு - வே.லதுஜா ஆறுதல்பரிசு

**சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் அகில இலங்கைச் சைவநெறித் தேர்வில் தங்கப்பதக்கம் (2006)**

தரம் - 12 இந்துநாகரிகம் - ராதிகா ராசசிங்கம் 1ஆம் இடம் தங்கப்பதக்கம்.

## தேசிய மட்டத்தில் மாணவர் சாதனை

2007 இல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அகில இலங்கை ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியில் தரம் 11 ஐச் சேர்ந்த நாகராஜா நந்தகோபன் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டதோடு 10,000 ரூபா பணப்பரிசிலையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

## Developing Leadership


An assembly is being conducted in English by the English Department from last year. This programme is organised to develop the English standard of our students and develop leadership. Gr 10, 11 and A/L studnents participate in this programme. Most of the students show lot of interest in taking part in this programme. We hope to continue this programme in order to develop leadership among student in our school.

English Day Competitions (Provincial Level - 2007)

Students won places in the provincial level English Day competition. R.Thenushan from Gr 7 won the second place in creative writing and N.Luxika from Gr 12 won Third place in Dictation. Every year many students from J Chavakachcheri Hindu College make achievements in English Day Competitions in District and provincial level.

## பௌதிக வள விருத்திச் செயற்பாடுகள்

**கல்லூரிப் பூங்காவில் சரஸ்வதி சிலை:**



கல்லூரிப் பூங்கா கல்லூரி மாணவர்களால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பூங்காவில் மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா சபையினரின் உதவியுடன் அழகிய சரஸ்வதி சிலை நிறுவப்பட்டுள்ளது. இது 2007 இல் விஜயதசமி தினத்தன்று கல்லூரி முதல்வரால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

*எமது கல்லூரியில் T.V மண்டபம், I மண்டபம் என்பனவும், F மண்டப பின்புறச் சுவர் என்பனவும், Unicef அனுசரணையுடன் 6,51921 ரூபா நிதியில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

## உள்ளக ஒலியமைப்பு வேலைத்திட்டம்

எமது கல்லூரி ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருப்பதால் பாடவேளைகளுக்கான மணி ஒலி எல்லா வகுப்பறைகளுக்கும் கேட்பதில் இடர்ப்பாடுகள் எதிர்நோக்கப்பட்டன. இதனை நீக்குமுமாக கல்லூரி அதிபர் அவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் உதவியுடன் சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்குச் சமர்ப்பித்த விண்ணப்பத்திற்கு அமைவாக உள்ளக ஒலியமைப்பு வேலைத்திட்டத்திற்கான இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதி உதவியை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மிகுதி நிதியை வழங்கியது. மூன்றுலட்சத்து தொண்ணூறாயிரம் ரூபா செலவில் இவ் ஒலி அமைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது. இதனைச் சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ்மாவட்ட இணைப்பாளர் திரு விக்டர் மோசஸ் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களும் இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்தார்.



*பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்-2008

எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் 26.01.2008 அன்று கல்லூரி அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நடப்பாண்டிற்கான செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு அ.கயிலாயபிள்ளை
செயலாளர்: திரு ம.குமாரவேல்ராஜா
பொருளாளர்: திரு ந.பாலச்சந்திரன்
நிர்வாகக்குழு உறுப்பினர்கள்
பேராசிரியர் க.கந்தசாமி
திரு செ.சபாரட்ணம்
திரு வே.கந்தசாமி
திரு க.லோகநாதன்
திரு நா.த.பூபாலசிங்கம்
திரு கா.சிவஞானசுந்தரம்
திரு சி.பத்மநாதன்
திரு க.இரவீந்திரன்
திருமதி இ.உலகநாதன்
திருமதி ப.சிறிபரன்
திருமதி க.ஸ்ரீதரன்
செல்வி இ.நடராசா
திரு சி.த.இரத்தினம்
திரு சி.அகிலன்

## க.பொ.த உயர்தரப் பெறுபேறுகள் - 2007

அண்மையில் வெளியான க.பொ.த (உ/த) பெறுபேறுகளை நோக்குமிடத்து எமது கல்லூரியின் பெறுபேறுகள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சிப் போக்கினைக் காட்டுவதாக அமைந்துள்ளன. நாட்டின் அசாதாரண யுத்த சூழ்நிலையால் அதிகளவு இடர்ப்பாடுகளை அனுபவித்து வரும் தென்மராட்சிப் பிரதேசத்தின் தேசிய பாடசாலையாக எமது கல்லூரி திகழ்கின்றது. எனினும் யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய தேசிய பாடசாலைகளுடன் எமது கல்லூரியின் க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளை ஒப்பிட்டு நோக்கும் போது எமது கல்லூரியின் சித்தியடைந்த மாணவர் வீதம் 76.3 ஆகக் காணப்படுகின்றது. இது ஏனைய பாடசாலைகளின் சித்தியடைந்த வீதத்தைவிட அதிகமானதாகும். அத்துடன் கடந்த ஆண்டைவிட இம்முறை 5.4 வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

ஒரு பாடசாலையின் உள்ளீடுகள் திட்டமிட்ட அடிப்படையில் முழுமையாகப் பயன்படுத்தப்படும் போது வெளியீடுகள் தரம் வாய்ந்தவையாக அமையும் என்பதற்கு சான்றாக இப்பெறுபேறுகள் அமைந்துள்ளன என்றே கூறலாம்.

2006, 2007 இல் எமது கல்லூரியின் க.பொ.த (உ/த) பெறுபேறுகள்

| அண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்திவீதம் |
|---|---|---|---|
| 2006 | 327 | 232 | 70.9% |
| 2007 | 291 | 222 | 76.3% |

## துறைரீதியான பெறுபேறுகள் - 2007

2007 மூன்று பாடங்களிலும் A சித்தி பெற்ற மாணவர் விபரங்கள்



கணிதம்
மாவட்டநிலை
04 26



அரியரட்ணம்கார்த்திக் இராஜேந்திரா மோகனகாந்த்



வர்த்தகம்
06 07



சிவலிங்கம் இலக்கியா பொன்னம்பலம் றினோசா

13





கயிலாயபிள்ளை கிருபாகரி

### சிறப்பான பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள் விபரம்







மா.நி 13 மா.நி 07

த.யுலூக்கன் ஜெ.ஜீவகன் இ.சிவகுணாளன்







யோ.கஜேந்திரா பா.செந்திரு. மோ.அபிராமி







ச.திவகுமார்ன் வை.துவாரகன் சி.கார்த்திகா









ப.சுதர்ஜினி சி.சசிகௌரி தெ.நர்மதா நா.தர்மினி

கிடைக்கப் பெற்ற புகைப்படங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

### கணிதம்

| | |
|---|---|
| கனகலிங்கம் கர்ஷன் | 2AB |
| மாணிக்கம் உதயராஜா | 3B |
| செல்வரத்தினம் சோபிஜா | 3B |
| சச்சிதானந்தமூர்த்தி சசிகுமார் | 3B |
| குணரத்தினம் மதீஸ் | ABC |
| மனோகரன் துவாகரன் | 3B |
| தெய்வேந்திரமூர்த்தி ஜெயகரன் | 3B |
| ஸ்ரீஸ்கந்தராஜா முகுந்தன் | 2BC |
| மகாலிங்கம் தினேஷ் | 3B |
| இன்பராஜா சிவகுணாளன் | ABC |

### உயிரியல்

| | |
|---|---|
| ஜெயவீரசிங்கம் ஜீவகன் | 2AB |
| தம்பிராசா யுலூக்கன் | 2AB |
| பாலச்சந்திரன் கஜலக்சன் | 2BC |
| மணிவண்ணன் திருமகள் | 2BC |

### வர்த்தகம்

| | |
|---|---|
| சந்திரசேகரம் திவகுமாரன் | 2AB |
| வைத்திலிங்கம் துவாரகன் | 2AB |
| சூரியகுமாரன் தர்சிகா | A2B |
| தில்லைநடேசன் தர்சிகா | A2B |
| உருத்திரன் கஜேந்திரராஜா | ABC |
| சந்திரபாலன் சுமந்திரன் | 3B |
| ஆனந்தசிவம் சிந்துஜா | 2BC |
| செல்லத்துரை தர்ஷா | 2BC |

### கலை

| | |
|---|---|
| இராஜசிங்கம் ராதிகா | 2AB |
| சிவராசா கார்த்திகா | 2AB |
| நடேசபிள்ளை ஜெயசக்தி | 2AB |
| மகாலிங்கம் சிவலோஜினி | 2AB |
| பத்மநாதன் சுதர்ஜினி | 2AB |
| நாகராஜா தர்மினி | 2AB |
| யோகராஜா அனுசியா | 2AC |
| பாலசுப்பிரமணியம் செந்திரு | 2AB |
| மோகனதாசன் மாலதி | A2B |
| பழனியாண்டி சாரதா | A2B |
| மோகனராஜலிங்கம் அபிராமி | 2AC |
| செல்வராஜா வினுஜா | A2B |
| சிவராசா சசிகௌரி | A2B |
| தெய்வேந்திரன் நர்மதா | A2B |
| யோகேந்திரராஜா கஜேந்திரா | A2B |
| நிற்சிங்கராஜா சக்தியா | A2B |
| லிங்கேஸ்வரன் கபிலா | ABC |
| மகேஸ்வரன் அஜித்தா | 3B |
| வரதராஜா துஷ்யந்தி | A2B |
| கந்தசாமி மனோகரி | ABC |
| சுப்பிரமணியம் கோபிகா | ABC |
| வன்னியசிங்கம் கபிலன் | ABC |
| தம்பிராசா சசிரேகா | ABC |
| தர்மலிங்கம் சிறிகலா | 2AC |
| கோவிந்தபிள்ளை அபர்ணா | A2B |
| செல்வராஜா ஜீவிதா | ABC |
| சின்னையா றேணுகா | 3B |
| சரவணமுத்து நிலானி | ABC |
| யோகராஜா அனித்தா | ABC |
| தங்கராசா தனுசன் | ABC |
| சுப்பிரமணியம் சுரேகா | ABC |
| வாமதேவன் பிரதீபா | 3B |
| நடராஜசுந்தரம் டிசானி | 2BC |
| நடராசா இன்பராஜ் | ABC |
| வல்லிபுரம் லோஜினி | ABC |
| மகாலிங்கம் அஜாலினி | 3B |
| சண்முகலிங்கம் துஸ்யந்தினி | 2BC |
| துரைராஜா அரஜன் | ABC |
| முத்துலிங்கம் அருணா | 2BC |
| கிருஷ்ணசாமி நாமகள் | ABC |
| தனபாலசிங்கம் கவிதா | 2BC |
| தவச்செல்வம் தஜிகா | 2BC |
| சற்குணானந்தன் இந்துமதி | 3B |
| பரமநாதன் விஜிதா | 3B |
| பூபாலசிங்கம் மேனகா | A2C |
| பாண்டியன் மிவர்ணா | 2BC |
| ஏரம்பு தேவகுமார் | A2C |
| வன்னியசிங்கம் கௌசிகா | 2BC |
| ஞானசேகரம் சுபாகரன் | 2BC |
| செல்லத்துரை கிரிதா | ABS |
| கந்தசாமி சுபேதா | 2BC |

## மாணவர் கௌரவிப்பு



2007 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற கணித, விஞ்ஞானத்துறை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு விஞ்ஞானமன்றத்தால் 24.01.2008 அன்று கல்லூரியில் நடத்தப்பட்டது. விஞ்ஞான மன்ற உப தலைவர் செல்வன் வி.மிராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிபர், பகுதித்தலைவர் செல்வி இ.நடராஜா ஆகியோரின் பாராட்டுரையும், பொறுப்பாசிரியர் திரு செ.இளங்கோ, திரு த.பாலசண்முகநாதன், திரு அ.குகன், திரு து.பிரதீபன், செல்வி அ.நிருபராணி, திருமதி சி.விமலன், திரு த.தவநேசன் ஆகிய ஆசிரியர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன. எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும் ஏனைய துறை மாணவர்களும் இம்மாத நடுப்பகுதியில் கௌரவிக்கப்பட உள்ளனர்.

## நிகழ்வுகள்

விஞ்ஞானச் செய்முறைக் கண்காட்சி - 2007



எமது கல்லூரியின் உயர்தர விஞ்ஞான மன்றத்தினர் தென்மராட்சிக் கல்வி வலய அனுசரணையுடன் விஞ்ஞான பாட ஆசிரியர்களின் நெறிப்படுத்தலில் க.பொ.த சாதாரணதர மாணவர்களின் செய்முறைத் திறனை ஊக்குவிக்குமுகமாக "செய்முறைகளின் செய்து காட்டல்" என்ற இரண்டு நாள் கண்காட்சியை எமது கல்லூரியில் நடத்தினர். இக்கண்காட்சியை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து ஆசியுரை வழங்கினார். தனது ஆசியுரையிலே "இச்செயற்பாடு யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் விஞ்ஞான பாட ஆசிரியர்களின் நெறிப்படுத்தலில் தகுந்த முறையிலே திட்டமிடப்பட்டு, அயற்பாடசாலை மாணவர்களும் பயன்பெற வேண்டும் என்ற உன்னதமான எண்ணத்துடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது."என்றும் "இச்செயற்பாட்டில் ஈடுபட்டு உழைத்தோர் பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் உரியவர்கள் இதுபோன்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறவேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

இக்கண்காட்சியின் பயனை நுகர்ந்த அனைவரும் சிறந்த பயனுள்ள செயற்பாடு என்று பாராட்டிச் சென்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இச்செயற்பாட்டுத் தொடர் வீடியோ மூலம் பதிவு செய்யப்பட்டு இறுவட்டுக்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான பாட கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு சிறந்ததோர் கற்பித்தல் சாதனத்தை ஆக்குவதில் பெரும்பங்காற்றிய பெருமை எமது கல்லூரி விஞ்ஞான மன்றத்தினர்க்கே உரியதாகும்.


செய்முறைகளின் செய்து காட்டல் என்ற இக்கண்காட்சியானது இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல் ஆகிய பாடங்களை மையப்படுத்தி பாடரீதியாக பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது.

பௌதிகவியல்

இலத்திரனியல் கப்பி
பொறியியல் நீர்நிலையியல்
ஒளியியில்
நியூட்டனின் இயக்கவிதியின் பிரயோகம்
ஓட்டமின்னியல்
தடைகள்
குற்றலைத்தாங்கி
மின்காந்தத்தூண்டல்

இரசாயனவியல்

சமநிலைத் தாக்கமொன்றுல் செறிவின்பாதிப்பு
சமநிலைத் தாக்கமொன்றில் வெப்பநிலையின் பாதிப்பு
சமநிலைத் தாக்கமொன்றில் அமுக்கத்தின் பாதிப்பு
இரும்பு துருப்பிடித்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
கொதிநீராவி காய்ச்சி வடித்தல்
பகுதிபடக்காய்ச்சி வடித்தல்
ஆவர்த்தன அட்டவணையும் மூலகங்களின் பொது இயல்புகளும்
மின்முலாமிடல்
மின் இரசாயனக்கலம்
மின் பகுப்பு
ஆய்வுகூடத்தில் வாயுக்கள் தயாரித்தல்
மூலக்கூற்ற வடிவங்களும் பிணைப்புக்களும்
சுவாலைப்பரிசோதனை



உயிரியல்

தாவர இழையங்கள்
விலங்கு இழையங்கள்
மனித நரம்புத் தொகுதி
மனித சுவாசத் தொகுதி
மனித கழிவுத் தொகுதி
குருதிச் சுற்றோட்டத் தொகுதி
முள்ளந்தண்டிலிகளும் அவற்றின் வெவ்வேறு வகைகளும்
முள்ளந்தண்டுளிகளும் அவற்றின் வெவ்வேறு வகைகளும்
பூக்கும் தாவரங்களில் மகரந்தச் சேர்க்கை
பூக்காத தாவரங்களில் வித்து உருவாக்கம்
நைதரசன் வட்டம், காபன் வட்டம் அவற்றின் போது நடைபெறும் மாற்றங்கள்
சூழலியல் தொடர்புகள் ஒட்டுண்ணி ஒன்றிய வாழி உதாரணங்கள்
உணவுப் பொருள் பரிசோதனை மாப்பொருள், புரதம், வெளியம், இலிப்பிட்டு
ஒளித்தொகுப்பு செயல்முறை வெல்லம்
ஆவியுயிர்ப்பு உறிஞ்சல்

## சேவை நயப்பும் பிரவுபசார வைபவமும்



திரு க.சுந்தரலிங்கம்



திருமதி பொ.இராஜரட்ணம்

எமது கல்லூரியில் நீண்ட காலம் அரும்பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்களான திருமதி பொன்னம்மா இராஜரட்ணம், திரு க.சுந்தரலிங்கம் ஆகியோரின் பிரிவுபசார வைபவம் கல்லூரியின் T.V மண்டபத்தில் 12.02.2008 அன்று பிற்பகல் 1.30 மணியளவில் ஆசிரிய சகோதரத்துவத் தலைவர் திரு க.ஜெயவீரசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமதி பொ.இராஜரட்ணம் அவர்கள் எமது கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியையாகவும், ஒழுக்காற்றுசபை (பெண்கள்) பொறுப்பாசிரியராகவும் பகுதித்தலைவராகவும் இருந்து ஆற்றிய பணிகள் மகத்தானவை. மாணவரின் நலனிலும், கல்லூரி

வளர்ச்சியிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். சமூகக்கல்வியும் வரலாறும், புவியியல் ஆகிய பாடங்களைச் சிறப்புறக் கற்பித்தவர். ஒழுக்கமுள்ள மாணவரை உருவாக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டவர். கல்லூரியின் பாரம்பரியம், பண்பாடு, கட்டமைப்பு என்பன குலையக்கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தவர். இவரது ஓய்வுகாலம் சிறக்கவும், சுபீட்சம் நிறைந்ததாக அமையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு க.சுந்தரலிங்கம் ஆசிரியர் அவர்கள் எமது கல்லூரியில் நீண்டகாலம் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர். தமிழ்மொழி , சைவசமயம் ஆகிய பாட இணைப்பாளராக இருந்து தமிழையும், சைவத்தையும் ஒருங்கு பெற வளர்ப்பதில் அயராது உழைத்தவர் மாணவர் உள்ளங்களை வென்றவர். சமூகப் பணிகளிலும், மாணவர் நலனோம்பல் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர் நாடகத்துறையில் மாணவரின் சாதனைகளுக்கு வித்திட்டவர். எல்லோரிடமும் அன்புடனும் பண்புடனும் பழகும் இனிய சுபாவம் உள்ளவர். இக்கல்லூரியின் இடைநிலை வகுப்புக்களில் தமிழ்மன்றப் போஷகராக இருந்து தமிழ்மொழி வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணி அளப்பரியது. இவரது ஓய்வுகாலம் அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்ததாக அமைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

---

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நகரசபை எல்லைக்குப்பட்ட பாடசாலைகளுக்கிடையே சாவகச்சேரி நகர சபையால் 2007 இல் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற எமது கல்லூரி மாணவர்கள் விபரம்

செல்வன் இ.நிதீஸ்ராம் - மத்திய பிரிவு கட்டுரை 2ம் இடம்

செல்வி ஜெ.ஜெயதர்சினி - மேற்பிரிவு கட்டுரை 1ம் இடம்

செல்வன் இ.இராஜப்பிரவிந்தன் - மேற்பிரிவு கட்டுரை 2ம் இடம்

செல்வன் நா.நந்தகோபன் - மேற்பிரிவு கட்டுரை 3ஆம் இடம்

செல்வி நி.அனோஜினி - மேற்பிரிவு கட்டுரை 2ம் இடம்

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் 19.02.2008 இல் நகரசபை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்றது.

A competition was held by the urban council chavakakchcheri last year on the basis of the National Reading month. The following students were selected to the above competition

| Name | Competition | Rank |
|---|---|---|
| 1. Miss Mathusha Sathiyananthan | Sight Reading | 1st |
| 2. Mas Sritharan Kreedi | sight reading | 1st |
| 3. Mas Satkunanathan Sajeesan | sight reading | 1st |
| 4. Mas.Balachadran Jeyalaxan | Creative writing | 1st |
| 5. Mas Rathimohan Thenushan | Creative writing | 2nd |
| 6. Miss Tharsini Ulageswaran | Creative writing | 1st |
| 7. Miss Ketharanei Mahendran | Creative writing | 1st |
| 8. Mas Srimurugathas Visagan | Creative writing | 1st |
| 9. Miss Luxica Nagendran | Creative writing | 1st |
| 10. Miss Kayalini Thiruchelvam | Creative writing | 1st |

The awarding ceremoney for the above students was held on 19th Feb.2008 at 9 am at the urban council conference hall.

இவ்வாண்டு வருகைதந்துள்ள பயிற்சி ஆசிரியர்கள் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து உள்ளகப் பயிற்சிக்காக

செல்வி ப.ரூபா (ஆங்கிலம்)

திரு ம.சசிகரன் (கணிதம்)

ஆகிய இரு பயிற்சி ஆசிரியர்களும் இவ்வாண்டு எமது கல்லூரிக்கு வருகைதந்து அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

எமது நோக்கு

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களால் 1904 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 104 ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நான்கு தேசிய பாடசாலைகளில் ஒன்றாகவும் யாழ்ப்பாண நகரத்துக்கு வெளியேயுள்ள ஒரு தேசிய பாடசாலையாகவும். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஆண், பெண் இருபாலாரும் கற்கும் தேசிய பாடசாலையாகவும் விளங்குகின்றது.

இங்கு தரம் 6 முதல் தரம் 13 வரை வகுப்புக்கள் உள்ளன. தரம் 6 முதல் 11 வரை 38 சமாந்தர வகுப்புக்களும் தரம் 12-13 ஆகியவற்றில் 16 சமாந்தர வகுப்புக்களுமாக மொத்தம் 54 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

குறைந்த பௌதீகவளத்தினைக் கொண்டு தென்மராட்சியில் அதிகளவு மாணவர்களை பல்வேறு துறைகளிலும் பிரகாசிக்கச் செய்கின்ற இந்துவின் செயற்பாடுகளை "தடம்" எனும் செய்தி மடலாக வெளிக் கொணர்வதில் பெருமகிழ்வடைகின்றோம். தாமோதரன் சஞ்சிகை மாணவர்களின் ஆக்கங்களுடன் வருடந் தோறும் வெளியிடப்படுகின்றது. தடம் தவணை தோறும் தகவல்களைத் தரவுள்ளது. இது மாணவர்களதும், ஆசிரியர்களதும் வினைத்திறனை மேம்படுத்துவதில் பங்களிக்கும் என்பது எமது நம்பிக்கை.

"தன் ஆன்மாவை வருத்திக் கொள்வதன் மூலம் மற்ற ஆன்மாக்களைத் திருத்தியமைக்கும் தியாகத்திற்கு தயாராகுங்கள்"

## பாடசாலைக்காணி கொள்வனவு

கல்லூரியின் மனையியல் ஆய்வு கூடத்துக்கு பின்புறமாக கல்லூரியின் எல்லையில் நான்கு பரப்புக் காணி விற்பனை செய்யப்படவுள்ளது. அது கல்லூரியின் வளர்ச்சிக்கு மிக அவசியமான காணித்துண்டாகும். அதை கொள்வனவு செய்வதற்கு பாடசாலை அபிவிருத்திச்சங்கமும், பழைய மாணவர் சங்கமும் முயற்சி எடுத்து வருகின்றன.

இக்காணிக் கொள்வனவுக்காக ஐக்கிய இராச்சியத்திலுள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் 3000 ஸ்டேலிங் பவுண் (இலங்கை ரூபா 6 லட்சத்து 54 ஆயிரம்) அனுப்பியுள்ளது. அவர்களுக்கு இக் கல்லூரிச் சமூகம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

காணிக் கொள்வனவுக்கான மிகுதிப்பணத்தை பெற்றோர், பழைய மாணவர், நல்லிவிரும்பிகளிடமிருந்து சேகரிப்பதற்கான முயற்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

காணிக் கொள்வனவுக்காக காணிக் கொள்வனவு சபை அமைக்கப்பட்டுள்ளது. அதன் அங்கத்தவர்கள் விபரம்

1) திரு அ.கயிலாயபிள்ளை அதிபர்
2) திரு கோ.வரதராசமூர்த்தி பி.க.ப
3) திரு செ.செந்தூரன் செயலாளர் ப.மா.ச
4) திரு மா.குமாரவேல்ராசா செயலாளர் பா.அ.ச
5) திரு யோ.ஜெயக்குமார் பொருளாளர் ப.மா.ச
6) திரு க.கமலரூபன் பிரதேசசெயலகம் சாவ
7) திரு வே.கந்தசாமி பிரதி அதிபர்
8) திரு க.லோகநாதன் பிரதி அதிபர்
9) திரு க.ஜெயவீரசிங்கம் தலைவர் ஆ.சகோ
10) திரு கா.சிவஞானசுந்தரம் செயற்குழு உறுப்பினர் பா.அ.சங்கம்
11) திரு ந.பாலச்சந்திரன் பொருளாளர் பா.அ.ச

## எமது நூலகத்தில் நாளாந்த ஏடுகள்

எமது நூல்கத்தில் தினக்குரல், உதயன் ஆகிய நாளாந்த பத்திரிகைகள் 2007 இல் வாசகர் பயன்பெறும் வண்ணம் கொள்வனவு செய்யப்பட்டன.

2008 ஆம் ஆண்டு முதல் வீரகேசரி, Sunday times, Sunday observer ஆகிய வாராந்தப் பத்திரிகைகளும், தினகரன், Daily News ஆகிய நாளாந்த பத்திரிகைளும், மாணவர்களுக்கு சிறந்த பயன்பாடுள்ள அம்சங்களைக் கொண்டுள்ள விஜய், ஜீனியல் (Genius) ஆகிய பத்திரிகைகளும் எமது நூலகத்தில் மாணவர் நலன்கருதி கொள்வனவு செய்யப்படுகின்றன. இப்பத்திரிகைகளின் மூலமாக மாணவர் பெறும் பயன்கள் மிக உச்சமானவை என நூலக ஆசிரியர் செல்வி ம.சுதமதி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

## சின்னஞ்சூட்டு விழா - 2008



எமது கல்லூரியில் 11.02.2008 அன்று கல்லூரி முதல்வர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் சாரணர் சின்னஞ்சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக வடமாகாண சாரணர் அமைப்பின் மூத்த உறுப்பினர் கலாநிதி மா.புவனேந்திரன் (ALT) அவர்களும் சிறப்பு விருந்தினராக திருமதி R.J.B.சேவியர் அம்மா (L.T) அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் எமது கல்லூரி சாரணர் பொறுப்பாசிரியர் திரு கா.கமலநாதன். சாரணர்களுக்கு சின்னஞ் சூட்டினார்.



திரு. நா. இராஜன்
B.A(Hons).Geo.Spl.Sp.Trd (Art).Dip in Ed

## தேசிய ரீதியிலான ஆசிரியர் விருது - 2007
## [National innovative Teachers Award 2007)

கல்வி அமைச்சின் இடைநிலைக்கல்வி நவீன மயப்படுத்தும் செயற் திட்டத்தின் கீழ் மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கணினி மென் பொருளாக்க போட்டியில்(Computer Software competition) வடமாகாணத்தில் முதலாம் இடம் பெற்று அகில இலங்கை ரீதியிலான இறுதி சுற்றில் கலந்து கொண்டு தேசிய புத்தாக்கத்திறன் ஆசிரியர்களுக்கான 2007(**National innovative Teachers Award 2007)** ஆம் ஆண்டுக்கான விருதினை மாண்புமிகு கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த் அவர்களிடம் கடந்த 29.02.2008 அன்று கல்வி அமைச்சில் இடம் பெற்ற விருது வழங்கும் வைபவத்தில் எமது பாடசாலை ஆசிரியர் திரு.நா.இராஜன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## புலமைப்பரிசில் நிதியம் - 2008

எமது கல்லூரியில் முப்பத்தொரு புலமைப்பரிசில் நிதியங்கள் சிறப்பான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 2008 ஆம் ஆண்டு முதல் மேலும் இரண்டு புலமைப்பரிசில் நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**திரு திருமதி பென்சமின் இராசரத்தினம் புலமைப்பரிசில்**
நிதியம்: (36350 ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது) க.பொ.த உயர்தரத்தில் புவியியல் பாடத்தில் அதிவிசேட சித்தியும், பல்கலைக்கழக அனுமதிக்குமான புலமைப்பரிசிலாகும்.


**திரு.திருமதி. க.மகேஸ்வரன் புலமைப்பரிசில்**
நிதியம்:(25000 ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது)

க.பொ.த உயர்தரத்தில் புவியியல் பாடத்தில் அதிவிசேட சித்தி பெறுபவருக்கும், க.பொ.த உயர்தர இரசாயனவியல் பாடத்தில் அதி விசேட சித்தி பெறுபவருக்கும், பல்கலைக்கழக அனுமதிக்குமான புலமைப்பரிசில் ஆகும்.

## பேடன் பவல் நினைவு தினம்




எமது கல்லூரிப் பிரதான மண்டபத்தில் 22.02.2008 அன்று சாரணியத்தின் தந்தை பேடன் பவல் பிரபுவின் நினைவு தினம் கொண்டாடப்பட்டது. பேடன் பவல் அவர்களின் உருவப்படத்திற்கு எமது கல்லூரியின் சாரணர் தலைவர் ஆசிரியர் திரு கா.கமலநாதன் அவர்கள் சுடரேற்றி, மலர்மாலை அணிவித்து கௌரவித்தார். சாரணர்கள் மலரஞ்சலி செய்தனர். அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை ஆசிரியர் திரு கா.கமலநாதன் ஆகியோர் சாரணியத்தின் சிறப்புப் பற்றி உரையாற்றியதுடன் சாரணர் அணித்தலைவன் செல்வன் தவசீலனின் பேடன்பவல் பிரபுவின் வாழ்க்கை வரலாற்றை தெளிவுபடக் கூறிய உரையும் சாரணர்களின் இசை நிகழச்சியும் இடம்பெற்றன.



## கண்ணீரப் பூக்கள்

எமது கல்லூரியில் இருபத்தெட்டு ஆண்டுகளாக அலுவலகப் பணியாளனாக இதய சுத்தியுடன் பணிபுரிந்து 07.02.2008 இல் இறைபதமடைந்த திரு கோவிந்தபிள்ளை புவனேஸ்வரன் அவர்களின் பணியும், பண்பும், கடமையுணர்வும், இக்கல்லூரியில் கால்பதித்த ஒவ்வொருவரின் நெஞ்சங்களிலும் ஆழப்பதிந்து வரலாறாய் எழுதப்பட்டுவிட்டது. அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனிடம் இதயபூர்வமாக இறைஞ்சுகின்றோம்.

## மாகாண மட்டக் கணித விஞ்ஞானப் போட்டி 2007

மாகாண நிலையில் நடைபெற்ற போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கணிதம்



தரம் - 7
T.செந்தாளன் 1ம் இடம்



தரம் - 8
R.நிதீஸ்ராம் 1ம் இடம்

விஞ்ஞானம்



தரம் - 10
S.நிஷாந்தி 1ம் இடம்



தரம் - 11
S.விசாகன் 2ம் இடம்



தரம் - 6 சு.சிருஷ்டிகா 3ம் இடம்

## கல்லூரி முதல்வரின் உள்ளத்திலிருந்து.........................



பாடசாலைக் கல்விக் கட்டமைப்பில் முடிவுப் பொருள் கல்விச் செயற்பாட்டில் பிரதான சேவைபெறுநரான மாணவர்களுள் விருத்தியடையும் தேர்ச்சியும் அதன் தரமுமாகும். ஒரு கல்வி நிறுவனம் வெளியார் மதிப்பீடுகளின் ஊடாக மாத்திரம் அபிவிருத்தி இலக்கை அடையமுடியும் என்கின்ற எண்ணத்திலிருந்து விடுபட்டு அபிவிருத்திக்குத் தேவையான சுயமதிப்பீடு என்ற ஒரு எண்ணக்கருவில் நம்பிக்கை வைக்கின்ற நிலைப்பாட்டினைத் தோற்றுவிப்பதே இன்றைய கல்வி மதிப்பீட்டின் இறுதி இலக்காகும். பாடசாலையின் சகல வளங்களும் அதன் செயற்பாடுகளும் கல்வியின் நோக்கத்தை அடையும் வண்ணம் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் உபயோகப்படுத்தப்படுதல் வேண்டும். கல்வித்துறையின் சகல அலகும் உரிய பண்புத்தரமுடன் செயலாற்றுகையில் சிறந்த இணைப்பும், ஒத்துழைப்பும் அர்ப்பணிப்புடன் கூடிய தன்மையும் உருவாகும்.

### வெளியீட்டுக்குழு

- வெளியீட்டாளர்:
  திரு அ.கயிலாயபிள்ளை
  அதிபர்
  யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
  Web - WWW ChC.lk
  T.P.No:021 222 7640
  Email 2Principal chc.lk



- ஆலோசனை:
  திரு க.லோகநாதன்(பிரதி அதிபர்)



  திரு வே.கந்தசாமி (பிரதி அதிபர்)



- பிரதம ஆசிரியர்:
  திரு க.முத்துலிங்கம்



- ஆசிரியர்:
  திருமதி . வி.மகேந்திரன் (தமிழ்)



  திருமதி தே.கமலேஸ்வரன் (ஆங்கிலம்)



- கணனி வடிவமைப்பு.
  ஆசிரியர் திரு நா.இராஜன்



- கணனிப்பதிவு:
  திருமதி க.நளாயினி





TO,..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

..........................................

FROM , PRINCIPAL,
J/CHAVAKACHCHERI
HINDU COLLEGE
CHAVAKACHCHERI